

அமரர்

# கணபதிப்பிள்ளை ஏகாம்பரம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## 31ம் நாள் நினைவு மலர்

03.06.2020


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவேந்தல்

இவ்வுலகில்

01 - 08 - 1939



இறையுலகில்

04 - 05 - 2020

அமரர்

## கணபதிப்பிள்ளை ஏகாம்பரம்

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

2020 ம் ஆண்டு சார்வரி வருடம்
சித்திரை திங்கள், திங்கள் கிழமை
பூர்வ பட்ச துவாதசி திதியில்
இறையடி சேர்ந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



எங்களின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்

ஏணிப்படியாக இருந்து

தன்னையே அர்ப்பணித்து

ஒளியூட்டிய எங்களின்

அன்பு தெய்வத்தின் இனிய

நினைவுகளை எங்களின்

இதயங்களில் சுமந்து வண்ணம்

இந் நினைவு மலரை

அவரின் நினைவுக்காக அர்ப்பணிக்கின்றோம்.

இவ்வண்ணம்,
என்றும் நீங்காத எண்ணங்களுடன்,
குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## பஞ்சபுராணம்



### விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகததினை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

### தேவாரம்

வண்டார்குழ லரிவையொடு
பிரியாவகை பாகம்
பெண்டான்மிக வானான்பிறைச்
சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை
தவளந்நெடு மாடம்
விண்டாங்குவ போலும் மிகு
வேணுபுர மதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

உடையாள் உன்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப்புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே ! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே !
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா !
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே !
ஏறணி கொடியெம் ஈசனே, உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண் டசுரு திருப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யும்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
அறநாலைப் புகல்வோனே அவிநாசிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித வாழ்வின் எடுத்துக்காட்டான மனிதனாக வாழ்ந்து இறையடி சேர்ந்த அமரர் கணபதிப்பிள்ளை ஏகாம்பரத்தின் வாழ்க்கை வரலாறு

கடல்நீர் சூழ் நிலம் கொண்ட எழிலும் வளமும் கொண்ட யாழ்ப்பாண தீப கற்பத்தின் சிரசென விளங்கும் மண்டைதீவில் இளையதம்பி கணபதிப்பிள்ளைக்கும் வேலணை கூளா தோட்டம் மருதையினார் பாக்கியலட்சுமிக்கும் 1939ம் ஆண்டு ஆவணித் திங்கள் முதலாம் நாள் கனிஸ்ட புதல்வராக திரு.கணபதிப்பிள்ளை ஏகாம்பரம் பிறந்தார். இவர் பிறப்பும், இளமைக்கல்வியும் மண்டைதீவில் அமையப் பெற்றிருந்தாலும் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக தந்தையாரின் அழைப்பின்படி யாழ் நகருக்கு இருப்பிடத்தை மாற்றினார்.

யாழ் நகரை இருப்பிடமாகக் கொண்டு வரும் இளமைக் காலத்தில் கிளிநொச்சியில் பல குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு யாழ்ப்பாண மக்கள் குடியேற்றப்பட்ட சமயத்தில் தந்தை,தாய் ,சகோதர, சகோதரிகளுடன் இல:06,D-10, உருத்திரபுரத்தில் குடியேறினார். இவர் தனது தந்தை,தாய்,மூத்த சகோதரரின் விருப்புக்கும்அபிலாசைக்குமேற்ப யாழ் தென்மராட்சியில் புகழ்பூத்த பல அறிஞர்களை உருவாக்கிய பெருமை கொண்ட றிபேக் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் தனது கல்வியைக் கற்று சித்தி நிலையை அடைந்தார்.

இவர் தனது முயற்சியினால் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் பதவி பெற்றுக்கடமை ஆற்றியதுடன் விவசாய முயற்சிகளில் சிறக்கவே செயற்பட்டார்.

இவரது சகோதரர் அமரர் கணபதிப்பிள்ளை அருளம்பலம் (ஓய்வு நிலை விவாகப்பிறப்பு இறப்பு பதிவாளர் கிளிநொச்சி ) தம்பியிடத்து அன்பு மழை பொழிந்து, அறுசுவை உணவும், ஆதரவும் அளித்த தந்தை போன்ற அண்ணன், அமரர் ஏகாம்பரம் அவர்கள். தம்பியின் உயர்வுக்காய்அயராது பாடுபட்டவர். இவர்களின் அண்ணன் - தம்பி உறவைக்கண்டு ஊரே போற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்துப் "பெரியக்கா" என இவரால் அழைக்கப்பட்டவர் திலகவதி இராசரத்தினம் அவர்கள். அக்காவிற்கும் அவர்தம் பிள்ளைகளின் வாழ்விற்கும் உயர்விற்கும் தன்னாலியன்ற உதவிகளை வழங்கிய உத்தமர் அமரர் ஏகாம்பரம் அவர்கள்

"சின்னக்கா" என்று இவரால் உள்ளன்புடன் அழைக்கப்பட்டவர் கணேசு புவனேஸ்வரி அவர்கள். உருத்திரபுர மக்களே **"சின்னக்கா"** என்று அழைக்கும் அளவிற்கு அன்போடு இயைந்த தம்பி இவர். சின்னக்கா பிள்ளைகளுடன் கூடி உண்டு மகிழ்ந்து இருந்தவர்.

கடைசித்தங்கை "பூவா" என அழைக்கப்பட்டவர் ஞானம்பாள் மனோகரன். பூவாவின் வாழ்வு இனிதாய் மலர்ந்திட பொருத்தமான வரனைத்தேடி நன் மக்கள் இருவரைப் பெற வழியமைத்தவர் சின்னண்ணன் அமரர் ஏகாம்பரம் அவர்கள்.

இவர் மருமக்களாக பெரியக்காவின் மூத்த மகனான இராசரத்தினம் உதயகுமாரனை(விவாக பிறப்பு இறப்புப் பதிவாளர் கிளிநொச்சி) தோளிலும் தொட்டிலிலும் சுமந்து பள்ளிப்பருவத்தில் நல்ல கல்விக்காய் வழிப்படுத்தி பட்சண உணவுகளும் ஆசை தீர வழங்கி உயர்தர ஆடைகள் அணிவித்து மகிழ்ந்தார். அத்துடன் மாமனின் அன்பு மருமக்கள் இளவேயினியோடும் இளங்குமாரனோடும் மங்களகுமரனோடும் இனிதாய் மகிழ்ந்திருந்தார்.

சின்னக்காவின் புதல்வன் சீரான கல்வி கற்று சிறப்புடன் வாழவும் பெரியண்ணன், தம்பியுடன் கூட்டாக உணவுண்டு மகிழ்வாக வாழவைத்த, மருமகனாம் கணேசு ஜனார்த்தனன் (கமநல சேவை உத்தியோகத்தர்.) அடுத்து ஜெயவேந்தி சிவகுமார் - மருமகள் கல்வி உயர்வுக்காக உழைத்து சப்ரகமுவ பல்கலைக்கழகம் வரை கற்க அழைத்துச் சென்ற மாமா இவர். ஆசையுடன் அருமை மருமகள் என அழைக்கும் இளவேந்தி நிர்மலராஜ். இவரின் கல்விக்கும் உயர்வுக்கும் அயராது உழைத்த உத்தமர். அதனால் தானன்றோ அன்னாரின் இறுதிக்கடமையை தாம் அன்புடன் ஏற்று செவ்வனே செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்துத் தங்கை மகளாம் பிருந்தினி. மாமா மகிழ இலங்கையில் வைத்திய நிபுணராக வந்து, லண்டனில் வைத்திய கலாநிதி பட்டம் பெற்ற அன்பு மருமகள், பிருந்தினி மனோகரன் அவர்கள் மாமாவிற்குரிய கடமைகளை செவ்வனே செய்து தத்துவம் புரிந்த மாமாவிற்கெனச் செயற்பட்டார். அடுத்து மருமகன் மனோகரன் அமிர்தகிரணும் மாமா மீது அளவு கடந்த அன்பு கொண்டவர். மருமக்கள் அனைவருக்கும் நாமம் சூட்டிய பெருமகனார் இவர். இவரது மைத்துனியாம் அமரர் பாக்கியலட்சுமி அருளம்பலம் மைத்துனராம் அமரர் இராசரத்தினம். அமரர் கணேசு அமரர் மனோகரன்

வாழும் காலங்களில் சமூக நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் செயற்பாட்டிற்கும் பங்காற்றி வந்ததுடன் சமூகத் தேவைகளுக்கான ஆலோசனை வழிகாட்டல்களையும் சமூகமாக ஆற்றிச் சமூக உறவுகளை வளர்த்து வந்தார். இவர் தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாக அதிதீவிரமாக அரசியலில் ஈடுபாடு காட்டினார் இவ்அரசியல்ஈடுபாட்டினால்தனது அரச உத்தியோகத்தை(அரசியல் பழிவாங்கல் காரணமாக) இழந்தார். இவர் தொடர்ந்து விவசாய முயற்சியில் ஈடுபட்டு வந்தார். தந்தை தாயை இறுதிவரை மதித்துப் பேணிச் சகோதர சகோதரி மற்றும் மருமக்களுடன் கூடி வாழ்ந்து வந்தார்.

இடைப்பட்ட காலங்களில் அரசியல் பற்றின் விளைவாக தனது சமாதான நீதவான் பதவிக்கான இரண்டாவது சத்தியப்பிரமாணத்தைச் செய்யாதுவிட்டார். கால கட்டத்தில் தாய் தந்தையர் மரணமடைந்த பின் தன் சகோதர சகோதரிகளுடனும் மருமக்களுடன் கூடி வாழ்ந்தார்.

தமிழ் மக்களின் பற்றினால் தமிழ் மக்களுக்கு என உயிர்வாழ்ந்தவர்களின் தொடர்புகளின் பலனாக அவரின் இருப்பிடத்தை வவுனியாவாக மாற்றி வாழ்ந்து வந்தார்.

சகோதரிகளின் பிள்ளைகளின் வாழ்வுகளை வளம் படுத்த உழைத்து வந்த இவர் வாழும் காலத்தில் அரிய பல செயல்களை பிறருக்கு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சட்ட ஆலோசனை வழங்குநராகவும்.
* தீர்க்க தரிசனம் கொண்டவராகவும்.
* அறிவுத்திறன் மிக்கவராகவும்.
*தனித்துவமான துணிச்சல் மிக்கவாக்கு வல்லமை கொண்டவராகவும்.
* மும்மொழி திறமையுடன் பல நிர்வாகக்கட்டமைப்புக்கள், அலுவலக விடயங்களை அறிந்தவராகவும்.
*அரசியல் அறிவு கொண்டவராகவும்.
* நுண்ணறிவு கொண்டவராகவும்.வாழ்ந்து வந்தார்.

தன்னிலை அறிந்து, தனது வயோதிப காலத்தை இனிமையுடன் கழிக்க எண்ணி தனது மருமகளின் இருப்பிடத்திற்கு (6 D-10உருத்திரபுரம்) வருகை தந்தார் அவ்வேளையில் வயோதிப வருத்தங்கள் அவரை வாட்டத்தொடங்கின இறுதியில் 04.05.2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம்சாந்தி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான சகோதரனே

........................

சகோதரராய்ப் பிறந்து - எம்மில்
சமத்துவம் பேணி
அமரத்துவம் கொண்டவரே
சதி என்ன? செய்தானோ - காலன்
வாடித் துடிக்கின்றோம்
உம் பிரிவுத் தீயில்.
கூடி நாம் இருந்த காலம்
நெஞ்சினுள் எழுகிறது
நேசங்கள் எல்லாம்
நேர் எதிரே தோணுகிறது.
நீட்டி நிமிர்ந்து
நேர் கொண்ட பார்வையில்
நிலைத்து நின்ற உம் உருவம்
நீக்கமற நிறைகிறது.
எமை நீங்கிச் சென்றீரோ - நீர்
எமை நீங்கிச் சென்றீரோ!
சோதரர் நாம் வாட எமை
சோதித்துச் சென்றீரோ!

பாசமிகு,

சகோதரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

மலர்ந்த மலருள் ஒரு மலர் மடிந்தது
மடிந்த மலரும் மறைந்தே போனது
முந்தநாள் காலன் உமை முழுதாய்க் கொண்டு போயும்
சிந்தையில் உமை வைத்துச் சிரத்தினால்
உமைத் தேடுகின்றோம்.
தேடிய தேடலில் ஊறியது திகட்டாத சிந்தைனைத் தேன்
சிந்தை இழந்து நாம் உமைச் சிவனாய்க் காண்கின்றோம்.
மருமக்கள் எமை - உம் மக்களாய் எண்ணி
பெரும்பணி ஆற்றிய பெரும் தலைவர் நீங்களே
மருமக்கள் மட்டுமன்றி எம்மக்கள் உம்மக்கள்
என்றெண்ணி என்றென்றும் அன்பென்னும் குடையில்
அரவணைத்தீரே
தொட்டிலில் தொட்டெடுத்து தோளில் போட்டு வளர்த்து
தோழனாய் எம்மோடு உலா வந்த மாமாவே
பாதியிலே நாம் பரிதவிக்கச் சென்றீரே?
ஆயிரம் சொந்தங்கள் ஆறுதலாய் வந்தாலும்
ஆறாத வடுக்களாய் உம் நினைவு ஊறுகின்றது.

பாசமுள்ள,
மருமக்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறா மகன் புலம்பல்

பெறா மகன் என்னைப்
பெற்றெடுத்த மகன் போலே
தத்தெடுத்தீரே ஐயா!
வித்துவம் நிறைந்த எம்
உத்தமரே நீர் எமை விட்டு
உறங்கிடவே சென்றீரோ?
சிகரம் நீர் சரிந்ததனால்
சித்தம் கலங்கியே நான்
சிதைந்து போனேனே
சின்னவன் என்
சிந்தனையைச் கிளறுகிறேன்
பெற்றெடுத்த தந்தையாய் நான்
போற்றி உமைக் காக்க எண்ணி
தவவேடம் பூண்டு நிற்க
காலன் உமைத் தேடி வந்து
கட்டிலொடு கொண்டு சென்றான்.
காத்திருந்து நலம் பேணி
கண்ணிமைபோல் பார்த்திருக்கக்
கொள்ளிதனை இடு என்று ஓர்
கட்டளை விட்டுச் சென்றீரே
ஓடுகிறேன் தேடுகிறேன்
உம் நினைவில் வாடுகிறேன்.

பெறா மகன்,
ஜே. நிர்மலராஜ்
(கஜீவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறா மக்கள்

புன்னகையுடன்பல புதினங்கள் வழங்கிய
பல ஆண்டு முதுசம் வீழ்ந்தே போனதுவோ
பெறாமக்கள் எல்லோரும் பெற்ற மக்கள் என்பீர்கள்
தொலைதூரம் நின்றதனால் சொல்லாமல் சென்றீரோ
தொலை தூரம் ஆனாலும் தொலைபேசி அழைப்பாலே
தொடு தூரம் ஆனோமே எமை விட்டு
தொடு வானம் சென்றீரோ
பொதுப்பணி நிலையில் புத்திமதி உரைக்கும்
மண்டை தீவுப்புலவா! எமை விட்டு
நெடுந்தூரம் சென்றீரோ உம் நிலை நின்று நாம்
உம் பணி தொடர்வோம் உங்கள் வரவை எண்ணியே
காத்திருப்போம்

**பெறா மக்கள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேர மக்களின் அவலம் .............

அன்பு மிகு தாத்தா
ஆசை மிகு தாத்தா
ஆடம்பர வாழ்வு இலாது
ஆசீர்வதித்த தாத்தா
அல்லல் ஏதுமின்றி
ஆசை முத்தம் தந்தவரே
அதிரும் எம் குரல் உம்
காதுகளில் வீழ்கிறதோ?
செல்லம் தந்து நீர்
சேட்டைகள் செய்தீரே
சிணுங்கி நாம் அழுகின்றோம்
சிரம் தாழ்த்தித் தொழுகின்றோம்.
மீண்டும் நீங்கள் இப்போதே வரவேண்டும்
ஆசையாய்ப் பேச வேண்டும்
ஆசை முத்தம் தர வேண்டும்
அன்பு மழை பொழிய வேண்டும்.

மீளாத் துயரில்,
பேரமக்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dear grandfather have you deceived us?

We are filled with love and love and culture. You will arrive early on the day of the day you will be delighted with the tone of athority. Love is never famine though. You would say may word for word is my granddaughters. You come with fruits in the camp. You have called to Vavuniya not to face. Even if you hide your memory of Emil will never be forgetter

Forever

Affeet ionate
gerand daughters
N.Mirnaliny
N.Pukalliny





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேத்திமார் புலம்பல்

அன்புத் தாத்தா நீங்கள் எமை
ஏமாற்றிச் சென்றீரோ?
அன்பால் அரவணைத்து
பண்பாட்டைப் போதித்து எம்
அகத்தினுள் நிறைந்தவரே!
அகவை தினம் எமக்கென்றால்
முன்னாளே வந்திடுவீர்
அதிகாரத் தொனியுடனே
மகிழ்வினை ஊட்டிடுவீர்.
கண்டிப்பாய் இருந்தாலும்
அன்புக்கோ பஞ்சமில்லை
வார்த்தைக்கு வார்த்தை
என்ர பேத்திகள் என்றே கூறிடுவீர்.
முகாமில் நாமிருக்க
பழங்களோடு வந்தீரே
முகாமே வேண்டாம் என்று
வவுனியாவிற்கு அழைத்தீரே.
நீங்கள் மறைந்தாலும்
எம்மில் உம் நினைவு
என்றென்றும் மறையாது.



என்றென்றும்
பாசமுள்ள பேத்திகள்,
நி.மிர்ணாலினி
நி.புகழ்லினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MY GRAND FATHER

Grandpa Ehamparam is not truly gone
Because our memories with him still live on
He bewildered me with the
complexity of his English
And his grasp of the modern
society left me in anguish
To see a gem of not only our
family, but our local community
And the Tamil Society to pass
away so inconsolably.



BY:-

Yanakan
Mahisan
(Londan)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம் தளராத நினைவலைகள்

நம் எல்லோர் மனதிலும் நிறைந்து நிற்கும் ஏகாம்பரம் என்னும் மாமனிதர் 04.05.2020 அன்று மாலை காலனவன் தன் பாசக்கயிற்றினால் இறுகக்கட்டி எம்மை விட்டு பிரித்துக் கூட்டிச்சென்று விட்டான் என்ற இடி போன்ற செய்தி எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது

அமரர் கணபதிப்பிள்ளை ஏகாம்பரம் அவர்கள் எனக்குச் சிறு வயது முதலே அறிமுகமானவர் இவர் நிமிர்ந்த நடை, நேர்கொண்டபார்வை, செயற்பாடுகள் யாருக்கும் அஞ்சாத துணிச்சலான பேச்சு, துன்பப்படுவோரைத் தூக்கி விடும் மனஇயல்பு சிறந்த ஆளுமை, பதினாறு வயது வாலிபனின் பற்றுறுதி, நல்லதையே சிந்தித்துச் செயற்படும் மனவலிமை அனைத்தையும் தன்னகத்தே கொண்டு இறுதி வரை எம்முடன் வாழ்ந்த பெருமகன்

அனைவரையும் இன்முகத்துடனும் பாசத்துடனும் உபசரித்து வந்ததுடன் தனது பெயரை அனைவரின் மனதிலும் ஊன்ற வைத்து சமூகத்தொண்டுகள் பலவற்றை புரிந்து வந்தார். மக்களுக்குரிய தொண்டுகள் நல்லதோ கெட்டதோ எதுவாக இருந்தாலும் தனது சொந்த முயற்சியினால் உதவினார்.

இவ்வாறான சூழலிலே "மக்கள் சேவையே மகேசன் சேவை"என்று கருதி தனக்குக் கிடைத்த சமாதான நீதவான் பதவியின் ஊடாக மக்களுக்குத் தேவையானவற்றைச் செவ்வனே செய்து வந்தார். அவர் ஒரு நல்ல வழி நடத்துனர். தன் சுற்றத்தார் மட்டுமல்லாது எல்லோரும் வாழ்க்கையில் நன்னிலையை அடைய வேண்டுமென்ற நோக்கத்தை அடி மனதில் கொண்டவர்.

தனது பாசமுள்ள சகோதரர் மீது மதிப்புக்கொண்டவர் மற்றும் மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள் மீதும் அன்புடனும் அரவனைப்புடனும் கண்டிப்புடனும் இருந்து வந்தார். நல்லவர் இவ்வுலகில் நீண்டகாலம் வாழமாட்டார்கள் என்ற எம்முடைய எண்ணக்கிடக்கையின் படி இன்னும் இந்த உலகில் இருந்து கஸ்டங்கள் துன்பங்களை அனுபவிக்க வேண்டாம் என்று எண்ணியே, பிறப்பு ஒன்று இருந்தால் இறப்பு என்ற ஒன்று நிச்சயமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற தத்துவத்திற்கு அமைய இவ்வுலக வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்து சிவனின் பாத மலர்களை சிறப்பு மிகு சித்திரைத்திங்கள் வளர்பிறை துவாதசி திதி நன்னாளில் கலந்து விட்ட அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவடிகளை பிரார்த்தித்து வணங்கி அவரது குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் சுற்றத்தார்கள் அனைவருக்கும் எனது குடும்பம் சார்ந்த ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆறுதலும் கூறிக்கொள்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கிரியா சுரபி வித திண்டா திலகம்
சிவற்பால கிருஸ்ணகுமாரக்குருக்கள்(பாபு குருக்கள்)
பிரதமகுரு பொறிக்கடவை கண்ணகி அம்மன் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயிரத்தில் ஒருவரான ஏகாம்பரம் ஐயா

அமரர் ஏகாம்பரம் ஐயா அவர்களின் மறைவு தமிழ் மக்களுக்கு ஓர் பேரிழப்பாகும் இவர் இளமைக்காலத்தில் இருந்து மரணிக்கும் வரை அரசியல் பொது வாழ்க்கைக்காக முற்று முழுதாகத் தன்னை அர்ப்பணித்து மக்கள் பணியாற்றியவர் ஆவார். தந்தை செல்வநாயகத்தில் இருந்து தமிழின விடுதலைக்காக போராடிய மிதவாத தலைவர்கள் உறுப்பினர்கள் வரை அத்தனை பேரிடத்திலும் அவர்களின் சரியையும், தவறுகளையும் நேரடியாக சுட்டிக்காட்டி எம்மினம் சார்ந்து தீர்க்க தரிசனத்துடன் செயற்பட்டவர்.

இவர் தனக்கு சரியென்று பட்ட கருத்தை எவரிடத்திலும் எந்தவித தயக்கமும் இன்றி இடித்துரைக்கக்கூடியவர் இதனால் சில எதிர்ப்புக்களை இவரது அரசியல் பொது வாழ்க்கையிலும் சந்திக்க நேரிட்டதுடன் பல சவால்களையும் எதிர் கொண்டார்.

அமரர் ஏகாம்பரம் ஐயாவிற்கும் எனக்கும் ஒரு தசாப்பதம் கடந்த மிக அன்னியொன்னியமான நட்புறவு இருந்தது. இவரிடம் இருந்து அரசியல் பொது வாழ்க்கை சம்பந்தமான விடயங்களை கற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது அரசியலில் எதிர்காலத்தில் நடக்கப்போகின்ற விடயங்களை முன்கூட்டியே எதிர்வு கூறக்கூடிய ஒரு தீர்க்க தரிசியாகவும் ஞானியாகவும் அமரர் ஏகாம்பரம் ஐயா காணப்பட்டார்.

ஆன்மீகத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் தனது தனிப்படட வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் தான் சந்தித்த சவால்கள், சோதனைகள்,வேதனைகள் என அத்தனையையும் என்னிடம் பகிர்ந்து கொண்டார். அவர் பகிர்ந்து கொண்ட விடயங்கள் எனக்குப் பெரும் அனுபவமாகவும் படிப்பினையாகவும் அமைந்தன. குறிப்பாக எமது இனத்திற்கு நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டுமென்றும் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் செய்ததுடன் இதற்காக பல அரசியல் தலைவர்களைத் தனது இறுதிக்காலத்தில் சந்தித்து தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரிய சிந்தனை கொண்ட அன்னாரின் கனவை நிறைவேற்றுவதற்கு எம்மாலியன்ற அத்தனை நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வது தான் அவருக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும். எனவே அவரது ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்வதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் , உற்றார் உறவினர் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*நன்றி*

*அன்புடன்*
*ந.சிவசக்தி ஆனந்தன் (மு.பா.உ வன்னி)*
*செயலாளர், தமிழ் மக்கள் தேசியக்கூட்டணி(EPRLF)*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் நினைவில் நிற்கும் சிறந்த மனிதர் ஏகாம்பரம் அண்ணர்.

'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைது இவ்வுலகு" என்று யாக்கை நிலையாமையைத் தெளிவாக்கியது திருக்குறள்.இன்றிருப்போர் நாளையிங்கே இருப்பதென்ன உண்மை என்னும் நிலையாமை என்ற இறப்புத் தத்துவத்தை ஆறுமாதங்களுக்கு முன் ஏகாம்பரம் அண்ணரும் நானும் அவரது வீட்டிலிருந்து அளவளாவி மகிழ்ந்த பொழுதில் என் மனதோ அறிந்திருக்கவில்லையாதலால் அவரது இறப்புச் செய்தி பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அவருடன் கதைத்த பொழுதில் அவரது பேச்சின் தெளிவும் ஆளுமையும் அவரது அடுத்தபணிகளை ஆர்வத்துடன் நோக்குவதற்காக வெகுவிரைவில் நாம் சந்திப்போம் என்ற உறுதியை மனம் வரித்துக் கொண்டிருந்தது. அவரது இளமைக் காலம் முதலாக உருத்திரபுரத்தில் அவரைப்பார்த்து அவரது திறமைகளை மெச்சி வாழ்ந்தவர்களில் நானும் ஒருவன் என்பதால் அவருடனான பழக்கம் என்றும் கசந்து போய்விடவில்லை.

எந்த விடயத்தினைப்பற்றிக் கதைப்பதற்கும் அவரிடம் தரவுகள் குவிந்திருக்கும். அவருக்குத் தெரியாத விடயமில்லை தெரியாதவர் ஒருவருமில்லை என்று மேல்வாயில் விரல்வைத்து அதிசயித்திருக்கிறோம். அரசியலிலிருந்து சோதிடம்வரை அவருக்கு அத்துப்படி. பல்கலைக்கழகக் கல்வியை எழுபதுகளில் முடித்த எமக்குக் கூழாவடியில் கூடும் பொழுது நடுநாயகமாக இருப்பவர் அவர்தான்.

எல்லோரையும் அரவணைத்துக் கதைக்கும்பொழுதும் அவர்களுக்கு மனஅழுத்தமோ தாழ்வுச்சிக்கலோ ஏற்படாதமுறையில் இறங்கிவந்தும் ஏறிச்சென்றும் கதைக்கக்கூடிய ஆளுமை முன்னோக்கிய சிந்தனையை ஏற்படுத்திவிடும். அவரைச்சுற்றிய கூட்டத்தில் மகிழ்ச்சி அலை பரவிக்கொண்டிருப்பதனைக் காணமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் முன்னிலை அரசியல்வாதியாக இருக்க விரும்பியிருக்கவில்லை. இருப்பினும் அரசியல் தலைவர்களை உருவாக்கும் ஆற்றல் அவரிடமிருந்தது. தமிழ் உணர்வுமிக்கவர் கொள்கைப்பிடிப்பாளர். சிங்களம் மட்டும் சட்டம் வந்தபொழுதும் அரசாங்க ஊழியர்கள் சிங்களத்தைப் படிக்க வேண்டும் என அரசாங்கம் கட்டாயப்படுத்தியபொழுதில் அதற்கெதிராகப் போராடிப் பதவியைத் தூக்கி எறிந்த போராளியவர்.

வீடு ,உறவு ,நட்பு என்ற வட்டத்தில் அவருக்கிருந்த ஈடுபாட்டினை அயலவனாக இருந்து அனுபவித்தவன்நான். சரியோ தவறோ தன்னைச் சார்ந்தவர்களை விட்டுக் கொடுக்காத, விட்டுக்கொடுத்துப் பேசாத பெருந்தகைமை அவரிடமிருந்தது. அத்தகைமை ஒன்றுதான் எல்லோர் மனதிலும் அவர் ஆதிக்கம் செலுத்தக் காரணமாகியது.

கொள்கைப் பிடிப்பும் எதற்கும் வளைந்து கொடுக்காத மன உறுதியும் நிஜவாழ்வில் பல பகைமைகளுக்குக் காரணமாயமைந்தாலும் அவரது அன்பும் நட்புறவும் அரவணைப்பும் எதிர்த்தவர்களே நண்பர்களாக மாறிவிடுதனை என்னால் நேரடியாக அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

ஏகாம்பரம் அண்ணர் அன்பும் பண்பும் கொண்டவர் அவரது இழப்பால் அவரது குடும்பம் மட்டுமல்ல சுற்றம் சூழலும் துயருற்றிருக்கிறது. ஆறுதல் வார்த்தைகளால் மட்டும் அவர்களைத் தேற்றிவிடக்கூடிய இழப்பல்ல அது. அவரது நினைவு எம்முடன் இரண்டறக்கலந்துவிட்டது அதனால் எம்மைப் பொறுத்தவரை அவர் இறக்கவில்லை.

அன்புடன்
அ.கணபதிப்பிள்ளை
முன்னைனாள் விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்
(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் ஏகாம்பரம்

அமரர் ஏகாம்பரம் அவர்களும் நானும் 1957ம் ஆண்டு இரணைமடுக் குளம் உடைக்கும் நிலையில் இருந்தபோதுதான் எமது முதல் சந்திப்பு நிகழ்ந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மூத்த குடிமக்களாகவும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினராகவும் பல அரசியல் பிரமுகர்களின் வளர்ச்சிக்கு ஊன்று கோலாகவும் இருந்துள்ளார். அது மட்டுமல்லாமல் இலங்கையின் எல்லாப் பகுதி மக்களையும் புலம்பெயர் மக்களையும் தெரிந்தவர். அரசியல் பதவி தேடும் ஒருவராக அமரர் ஏகாம்பரம் என்றும் இருந்ததில்லை.

தனக்குச் சரியாகப் பட்டதை ஒழிவுமறைவின்றி நேரடியாக சொல்லும் பண்பு அவரிடம் இருந்தது. அதனால் அவர் தனது வாழ்வில் பல அரிய சந்தர்ப்பங்களை இழந்துள்ளதுடன் அதற்காக என்றும் அவர் கவலையடைந்ததில்லை.

தனிச் சிங்களச் சட்டத்தை ஏற்று சத்தியப் பிரமாணம் செய்யாமல் தனது பதவியைத் துறந்ததுடன் அத்தியாகத்தினை அரசியல் வளம்படுத்துவதற்கு என்றும் முயன்றதில்லை. பல அரசியல்வாதிகளின் வெற்றிக்காக ஒரு ஊன்றுகோலாகவும் தன்னைப் பயன்படுத்தியுள்ளார்.

பதவிக்காக அலைந்து திரியும் இன்றைய சில அரசியல்வாதிகளைப் பார்க்கும்போது அமரர் ஏகாம்பரம் அவர்கள் ஒரு அதிசய மனிதர் என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியும்.

எங்கள் இருவரினது அரசியல் வாழ்வு இருதுருவமாக இருந்தாலும் முரண்பாடுகள் இல்லாமல் நண்பர்களாகவே இருந்துள்ளோம்.அவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புடன்
இ.கிருஸ்ணராசா
முன்னாள் மாவட்ட சபை உறுப்பினரும் சமாதான நீதவானும்
13/1 திருவையாறு
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரியாது என்னும் பதம் தெரியாத நாளும் தெரிந்த எங்கள் அண்ணர்.

அமரத்துவம் அடைந்த கணபதிப்பிள்ளை ஏகாம்பரம் அவர்கள் எனது அன்புக்குரிய அண்ணர். அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்தேன். அவரது தந்தையார் கணபதிப்பிள்ளை, எனது தந்தையின் சகோதரர்.

சிறுவயதில் எனக்கு நெருக்கடிகள் வந்த வேளைகளில் எல்லாம் எனக்குப் பக்க பலமாக இருந்து யாவற்றையும் வென்றெடுக்க பெரிதும் உதவியாக இருந்தவர்.

நியாயத்துக்கு மாறான செயல்களைத் தட்டிக் கேட்கும் வல்லமை பெற்றவர்.

**"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**

**உள்ளத்துள் எல்லாம் உளன்."**

என்னும் வள்ளுவனின் குறளுக்கேற்ப வளர்ந்தவர். இவர் தனக்கென வாழாது சமூக நீதிக்காகவும் தனது உறவுகளுக்காகவும் தனது வாழ்வை அர்ப்பணித்தவர்.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சிவசக்தி ஆனந்தன் என்னுடன் உரையாடும்போது கூறினார் ஏகாம்பரம் ஐயா ஓர் அரசியல் பெட்டகம். அவரைக் காப்பது நமது தலையாய கடமை என்று.

**"நெடுநல் உளனொருவன் இன்றில்லைஎன்றும்**

**பெருமையுடைத்திவ் வுலகு."**

நேற்றுஇருந்தவர் இன்றில்லை (எம்மோடு இல்லை) என்பது இதன் பொருள்.இவர் எம்மைவிட்டு மறைந்தாலும் மனிதநேயம் மிக்க மனிதர்களின் இதயங்களில் என்றும் நிலையாக வாழ்வார்

அன்புடன்
தம்பி சி.ஜெயசிங்கம்
மண்டைதீவு (கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத மாமனிதர்

இளம் வயது முதல் ஏகாம்பரம் அண்ணர் அரசியல் விடயங்களில் ஈடுபாடாய் இருந்தார்.இதனால் தமிழரசுக் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினராகச் சேர்ந்தார். மும்மொழியிலும் ஆற்றல் உள்ளவராகவும் திகழ்ந்ததால் அரசியல்வாதிகளிடையேயும் செல்வாக்கு உள்ளவராகக் காணப்பட்டார். அத்துடன் சமூகப் பணியிலும் ஆன்மீகத் துறையிலும் சிறந்து விளங்கினார். கிராமத்தில் யார் உதவி கேட்டாலும் உயர் அதிகாரிகள் வரை சென்று தன்னாலான உதவிகளைச் செய்யும் சிறந்த மனிதராகக் காணப்பட்டார். இன்றும் அவரது கம்பீரமான பேச்சு வன்மையும் தனக்கே உரித்தான செயற்பாடுகளும் எம் கண்முன்னே நிழலாடிக் கொண்டிருக்கிறது. அவரது நினைவுகள் என்றென்றும் மறையாமல் இருக்கிறது. இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு"**

நடராஜா நித்தியானந்தன்,
ஓய்வு நிலை அதிபர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புண்ணியரே ஐயா

பொதுச் சேவை புரிய வந்த
புண்ணியரே ஐயா!
வையிரவப் புளியன்குளம் வந்தமர்ந்து
என்னை புனிதன் ஆக்கினீரே!
துன்பங்கள் நேர்கையிலே உமைத்
தேடி ஓடி வந்தேனே
அறிவுரை வேண்டும் என்கிறபோது
ஆண்டவராய் நினைத்தேனே.
மும்மொழி வித்தகராய்
அரசியல் ஆலோசகராய்
அறிவின் அறிவாய்
உறவின் உறவாய்
உறைந்தே போனீரையா!
யார் எவர் என்று இல்லாது
அல்லல்கள் சூழ்ந்திட்டால்
தேடி வந்து துன்பம் களைந்தீரே
உம்மை காலன் சூழ்ந்தனனோ.
உந்தன் வரவை
உணர்வோடு தேடுகிறேன்
உரிமையோடு உம்மை
ஐயா என்றே அழைக்கின்றேன்
ஒரு முறை எந்தனிடம்
ஓடி வந்திடும் ஐயா.

அன்புடன்,
திரு.விஜயகுமார்,
கிராம சேவகர்,
வையிரவப் புளியங்குளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாம்பரம் ஐயா குறித்த சில மனப் பதிவுகள்

திரு. கணபதிப்பிள்ளை ஏகாம்பரம் எனும் அரசியல் சமூக ஆளுமை எம்மை விட்டுப் பிரிந்து விட்டது. இனி அவர் போன்ற அரசியல் முன்னோடி எமக்கு கிடைப்பாரோ என்பது சந்தேகம்தான். ஏகாம்பரம் ஐயாவின் வாழ்வில் இடம்பெற்ற சில மனிதர்களுள் நானும் இடம் பெறுகின்றேன். கிட்டத்தட்ட கடந்த 15 வருடங்களாக நான் அறிவேன்.

கொழும்பில் துணை மருத்துவச் சேவையில் நான் கற்றுக் கொண்டிருந்த காலம் வடகிழக்கு மாகாணங்கள் எங்கும் போர் மேகம் சூழ்ந்திருந்தது. எனது தமையன் வவுனியாவில் வசிப்பதால் வவுனியா வைத்தியசாலையில் கடமையாற்ற நான் விரும்புவதாகக் கூறினேன். அதற்கான முழு ஏற்பாடுகளையும் மேற்கொண்டு உதவியவர் ஏகாம்பரம் ஐயா. அவர் எனது அரசியல் நடத்தை குறித்தும் எனது சமூகப் பங்களிப்பு குறித்தும் அவ்வப்போது சிறந்த ஆலோசனைகளை வழங்கினார். எனது பேரனாரான திரு.பொன்னையா ( கூட்டணி பொன்னையா என அறியப்படுபவர் ) குறித்து அதிக அன்பும் மரியாதையையும் கொண்டிருந்தார். என்னுடன் உரையாடும் சந்தர்ப்பங்களில் நீயும் பொன்னையா அண்ணை போல நீதிக்கும் அறத்திற்கும் துணையாக நிற்க வேண்டும் எனக் குறிப்பிடுவார்.

அவரைக் குறித்து பல விடயங்களைக் குறிப்பிட முடியும். ஆனால் இந் நினைவு மலரின் சுருக்கம் காரணமாக சிலவற்றையே குறிப்பிடக்கூடியதாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அடிக்கடி கூறும் வார்த்தை "தீதும் நன்றும் பிறர் தரவாரா." இந்த சத்தியமான வார்த்தைகள் மீது அவர் ஆழமான நம்பிக்கையும் புரிதலும் கொண்டிருந்தார். நாம் செய்கின்ற அல்லது ஈடுபடுகின்ற விடயங்களே எமது நன்மை தீமையை தீர்மானிக்கும் என்பதே அதன் பொருள்.

மகாபாரதத்தில் பீஷ்மர் எவ்வாறு ஒரு தவிர்க்க முடியாத பாத்திரமாக உருவெடுத்தாரோ அவ்வாறே தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியலில் ஏகாம்பரம் ஐயாவின் ஆளுமையும் அமைகிறது. அறம் மற்றும் சமூக விழுமியங்கள் அரசியலைக் கொண்டு நடத்தும் பொறிகள் என உறுதியாக நம்பினார். 1976ல் இடம் பெற்ற வட்டுக் கோட்டைத் தீர்மானத்திற்கு பின்னர் கட்சி அரசியல் ஒரு புரட்சிகர அரசியல் நோக்கி நகர்ந்த பின்னர் தந்தை செல்வாவின் கொள்கைவழி அரசியலுக்கு பெரும் துணையாக நின்றுழைத்ததன் காரணமாக ஒரு சுயநல அரசியல் வாதியின் கோபத்தை அவர் நேருக்கு நேர் சந்திக்க வேண்டியிருந்தது. இருந்தபோதிலும் அறவழி நடப்பவர்களை இணைத்துக் கொண்டு ஏமாற்று அரசியல் நடத்திய பல போலித்தலைமைகளைச் சமூகத்துக்கு இனங்காட்டினார். அவரது மரணம் வரை பிழையான அரசியல் பிழையுற நடத்துபவர்களை தலையெடுக்கவிடாமல் தடுத்துக் காய்களை நகர்த்திய அரசியல் சதுரங்கக்காரன் என்றே அவரை நான் கருதுகின்றேன்.

அவர் அரசியல் ரீதியாக எந்தக் காயை நகர்த்தினாலும் அதன் அடிநாதமாக அரசியல் அறம் இருந்ததை நான் கண்டு கொண்டேன். இந்தப் புரிதலே என்னையும் அவரையும் மேலும் மேலும் நட்புரிமை பாராட்ட வைத்தன. அவர் கடினமான கோபக்காரனாக இருந்தார். பிடிக்காது விட்டால் நேரே சொல்லுவார். அவர் சில சமயங்களில் கோபப்படும்போது நான் அமைதியாக இருப்பேன். அடுத்த முறை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வீட்ட ஒருக்கா வா என்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வீட்டிற்கு செல்லும்போது நாங்கள் எல்லாவற்றையும் மறந்து உரையாடலைத் தொடங்குவோம். அதுவே கடைசிவரை நமது நட்பாக இருந்தது.

'ராசா' க்களின் வீழ்ச்சி அவரைக் கடைசிவரை கடுமையாக பாதித்தது. ( ராசாக்கள் என்பதே அவரது சொல்லாடல்) அதை அவர் அடிக்கடி சொல்வதில்லை. ஆனால் கவலை தெரிந்தது. சட்டத்தரணியாக இல்லாதபோதும் அதிகளவு சட்டத்தரணிகளுடன் பழகியதால் சட்டங்கள் குறித்த பூரண அறிவைக் கொண்டிருந்தார். ராசாக்கள் ,அப்புக்காத்து என்பவை அவர் அடிக்கடி பயன்படுத்தும் இரண்டு வார்த்தைகள்.

அவரது நினைவும் வழிகாட்டலும் எப்போதும் எம்மைவிட்டு நீங்காதவை. அவர் அடிக்கடி உச்சரிக்கும் குறளோடு இந்த நினைவுப் பகிர்வை முடிக்கின்றேன்.

**"இடிப்பாரே இல்லாமல் ஏமாறா மன்னன்**

**கெடுப்பாரே இல்லாமல் கெடும்."**

***நன்றி***

த.ஜெகதீஸ்வரன்,

சீனியர் காடியோகிராபர், பொது வைத்தியசாலை,கிளிநொச்சி.

மேனாள் பிரதேச சபை உறுப்பினர், கரைச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரும்பொன்று நுழையும் வண்ணம் துளையொன்று செய்துசின்ன
எறும்பொன்று பூதல் போலே எந்திரம் செலுத்தி ஒன்றை
நரம்பொன்று பழுதுராமல் எம்மை நலமுறச்செய்த உம்மை
கரும்பென்று தந்த சொல்லால் சிறுகவிகட்டி வாழ்த்தப்போறேன்
காலனவன் கவர்ந்திட்ட கற்பகமே எம் கண்கவரும் அற்புதத்தின்
வித்தகரே.
ஞாலமதில் பிறந்திட்ட உம் புகழை நான் ஞானியல்ல
யார்ப்பதற்குக்கவியாக
வேலனை வந்துதித்த தவக்கொழுந்தே எம்மனங்களில் நிறைந்திட்ட
சிவக்கொழுந்தே ஏகமெனில் ஒருவனம் தமக்கு இணையற்ற
இறைவனாமே பரம்என்றால் பரம்பொருள் அதுவும் பரம சிவம்
என்போம்.ஏகாம்பரம் என்ற இரட்டை சொல் திருநாமம் நிகரற்ற
இறைவன் என பொருள் அறிந்து உணர்வோமாவாழ்ந்த
பின்புமட்டுமல்ல வாழும்போதும் வரலாறு ஆனவரே
வேதங்கள் கூறிடாத வீறுகொண்ட கற்பகமே
ஆறடியின் அற்புதமே அறுத்துறுத்த சொல்வளமே
வயதென்ன ஆனாலும் வளையாத வைரமே
ஆயகலைகள் எல்லாம் உம்மில் அடக்கம்
அரசியலும் அனுபவமும் உம்முள் அடக்கம்
பல்துறை விற்பனர் பல்மொழிச்சொல்வல்லர்
நிகழ்கால நூற்றாண்டில் எம்மனங்கவர் மாமனிதர்
காந்தா என தாமும் என் தந்தையை அழைக்கையிலே
அளவிற்கரிய அன்பு அதிகமாய் அங்கிருக்கும்
துசி என்று தாம் சொல்லும் ஒருவார்த்தை கேட்டு விட
ஓடோடி வருவேனே. நீர்இருந்த நாட்களெல்லாம்
நிலவொளியே நம் வம்சாவளி கதைகளெல்லாம்
தாம் சொல்ல நான் கேட்க வைகைநதி ஊற்றெடுக்கும்
வியாபிப்பை உணர்வேனே.
நிகழ் காலம் தொலைத்த உம்மைக் காலனவன் கவர்ந்த
போதுமீட்டெடுக்க ஆசை கொண்டு தோற்று விட்டோம் நீர் எங்கே
சிவசக்தி ஆனந்தன் சிறுவயது நண்பன் என்பீர்
விக்னேஸ்வரன் ஐயா என் விரல் கோக்கும் அன்பென்பீர்
என் மருமகளாம் இளவேந்தி என் மனம் தொட்ட உறவென்பீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிமாநகரெல்லாம் என் வைரக்கோல் பட்டதென்பீர்
தம்மோடு ஒன்றாக பயணித்த காலமெல்லாம் சிந்தையில்
மறையாதமகரதக்கற்களாம்
அரசியலும் அனுபவமும் ஆன்மீகப்பேரறிவும் சட்டமும் சமரசமும்
உம்மை விட யாரறிவா
என்பாட்டன் நாகராஜா அன்றே தம் கரம் பிடித்து
உள்ளமதைத் தொட்டே உத்தம நண்பரானார்
அரசாங்க அதிபராய் அரியணையில் அமர்ந்த போதும்
உம்மோடு அவர் நட்பு கண்ணோடு இமையாமே
காலத்தால் வென்ற என் சொந்தக் கதைகளை பட்டை தீட்டும்
வைரம்போல் எம் கண்களிலே ஜொலிக்கவைத்த நாயகனே
வெள்ளாடை நீர் உடுத்து வீதி அதில் நடக்கையில்
வீறு கொண்ட சிங்கம் ஒன்று வீதி வந்த காட்சியெழும்
தனியாக வாழ்ந்தவரே ஆனால் தனிமையை வென்றவரே
தியாகராஜா நண்பனென்றீர் தினமும் நீ வரனுமென்றீர்
மரணமது வந்த போது மருமகளுடன் இருக்கச்சென்றீரே
மரணத்தில் மாழ்வது மானிடன் உடலே
மாமனிதர் நீரோ மரணத்தை வென்றுவிட்டீர்.
கந்தா வாவெனவே இறுதியிலும் அழைத்தீரே
துசி வருவான் வைத்தியனாய் அனுதினமும் சொன்னீரே
என் ஜாதி முல்லை அவன் என் உறவின் ஒரு விழுது
என் பேரன் என்பீரே
வான் கொண்டு வருவானே வழியனுப்ப வருவேனே
மறுமுறை துசியோடு கொழும்பு வரை செல்வேனே நாம்
வாயுரைத்த வாக்கெல்லாம் வாஞ்யையாக நிற்கின்றது
உம்மோடு உரையாட என் மனங்களுமே விளைகின்றது.
எழுந்த வரவேண்டும் எங்கள் ஐயாவே
ஏறு புகழ் கொண்ட உம்மை எதிர்பார்த்து நாம் இங்கே

தங்கள் பிரிவால் துயறிற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனப்பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவத்துயருடன்
த.ஸ்ரீகாந்தன் குடும்பத்தினர்
(ஸ்ரீ. துஷிகாந்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாம்பரம் ஐயாவின் இழப்பு தமிழ் அரசியலுக்குப் பேரிழப்பு

இலங்கைத் தமிழ் அரசியல் வட்டாரங்களில் பெருமளவு அறியப்பட்ட ஒருவராக ஏகாம்பரம் ஐயா செயற்பட்டு வந்தார். இவ்வளவு விரைவாக அவர் எம்மை விட்டு பிரிவார் என்று எதிர்பார்க்கவில்லை தெளிவான அரசியல் கொள்கை, நடைமுறைச் சாத்தியமான அரசியல் விலை போகாத சிந்தனை என்பன அவரிடம் இருந்தது.

தமிழ் மக்களின் அரசியல் விடுதலையைத் தனது உயிர் மூச்சாகக் கொண்டிருந்தார். கடந்த பத்து ஆண்டுகள் மட்டுமே அவரை எனக்குத்தெரியும் என் தந்தையின்நண்பராக இருந்த அவர், என்னுடன் நெருங்கிப்பழக ஆரம்பித்தார் விவசாயியான எனது தந்தையின் செயற்பாடுகளை அவதானித்த அவர், அவரைப் (பெருமகான்) என்று அடிக்கடி கூறுவார் ஆனால் அவருக்கு முன்னமே என் தந்தை இறந்து விட்டார். ஆயினும் இறுதிவரை ஏகாம்பரம் ஐயா என்னுடன் தொடர்பில் இருந்தவர். எனது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தவறாது பார்வையிடுவார் அது தொடர்பான விமர்சனங்களையும் முன்வைப்பார். வடக்கு, கிழக்கு மற்றும் தென்னிலங்கை அரசியல் தொடர்பாக தெளிவான சிந்தனை கொண்டிருந்தவர். நடக்க இருக்கும் அரசியல் மாற்றங்களை அறியும் வல்லமை கொண்டிருந்தார்.

நடைமுறையில் உள்ள ஒவ்வொரு தமிழ் தலைவர்களையும் நன்கறிவார் அவர்களுடைய பலம், பலவீனம் என்பவற்றை அறிந்த ஞானியாகவே விளங்கினார். எதனையும் வெளிப்படையாகப் பேசும் சுபாவம் கொண்ட காரணத்தினால், சில எதிரிகளையும் சம்பாதித்து இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கொழும்பு உட்பட நாட்டில் இருக்க கூடிய புகழ் பூத்த சட்டத்தரணிகள், கல்விமான்கள் போன்றோரை நண்பராக்கி இருந்தார். இதனால் பொது அறிவானது அவரிடம் மிகுந்து இருந்தது இவரது இழப்பு என்னைவாட்டி வதைக்கிறது. அவரது நினைவுகள் மறக்க முடியாமல் உள்ளது. இந்த மாமனிதர் என்னுள் நீங்கா இடம் பிடித்துள்ளார் என்பதை இறந்த பின்னரே உணர்கின்றேன்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

செல்வரட்ணம்-சுதாகரன்
பிரதான ஆசிரியர்
தமிழ்த் தந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு(ம்) நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

என்பொடு கொம்பொடாமை யிவை மார்பி லங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றோ டேழுபதி னெட்டோடாறு
முடனா யநாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந் தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அறநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடபாலிருந்து
மறையோ துமெங்கள் பரமன்
நதியோடு கொன்றை மாலைமுடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய் களான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

நஞ்சணி கண்டெனந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடு முருமிடியுமின்னு
மிகையான பூத மவையும்
அஞ்சிடு(ம்) நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

வாள்வரி யதள தாடைவரி கோவணத்தர்
மடவாள் தனோடு முடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடிவந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரியுழு வையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிள முலைநன் மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வனடைவார்
ஒப்பிள மதியு மப்பு முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையானபித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

வேள்பட விழிசெய் தன்று விடைமேலிருந்து
மடவாள் தனோடு முடனாய்
வாண்மதி வன்னி கொன்றைமலர் சூடிவந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன் றனோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமகளோ டெருக்கு முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர் மிசையோனுமாலு மறையோடு தேவர்
வரு காலமான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியுநாக முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரோ டமணைவா திலழிவிக்கும் அண்ணல்
திருநீரு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

தேனமர் பொழில் கொளாலை விளைசெந் நெல்துன்னி
வளர் செம்பொன் னெங்கு(ம்) திகழ
நான்முக னாதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞானமுனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வார் ஆணை நமதே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகோற்சவப் பாடல்கள்

**கணபதி தாளம்**
**பண்- தக்கராகம்**

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பந்
பூச்சுங் கீழ்
உடையுங்கொண்ட உருவ
மென் கொலோ

**சிவன்**
**தாளம்:- விருசம்**
**பண்:- காத்தாரம்**

சொற்றுணை வேதியன்
சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி
பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர்
கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது
நமச்சி வாயவே.

**அம்பாள்**
**பண்- நட்டப்படை**

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தஅருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவசந்தி தோத்திரம்

**பிரம்ம சந்தி**

**பண்- மேகராகம்**

நீறுசேர்வதொர் மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை அண்ணலே.

### இந்திரசந்தி (கிழக்கு)

**பண்- காந்தாரம்**

பூச இனியது நீறு
புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு
பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு
வந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு
திருஆல வாயான் திருநீறே.

### அக்கினிசந்தி(தென் கிழக்கு)

**பண்- கொல்லி**

மண்ணில் நல்ல வண்ணம்
வாழலாம் வைகலும்
எண்ணில்நல்ல கதிக்கு யாதும்
ஓர்குறைவு இல்லை
கண்ணில் நல்ல.ஃ.துறும்
கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாலொடும்
பெருந்தகை இருந்ததே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமசந்தி (தெற்கு)

பண்- நட்டப்பாடை

காத லாகிக்
கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை
நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும்
மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம்
நமச்சி வாயவே.

**தென்மேற்கு திருதி சந்தி**

**பண்- நட்டப்பாடை**

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

**வருணசந்தி மேற்கு**

**பண்- தீகாமரம்**

மட்டிட்ட புன்னையங் கானல் மட மயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலிச்சரமர்த்தான்
ஒட்டிட்ட பண்பின் னுருத்திர பல்கணத்தார்க்
காட்டிட்டல் காணோதேபோதியோ பூம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாயு சந்தி (வட மேற்கு)

**பண்- தக்கேசி**

வேதமோதி வேண்ணுள் பூண்டு
வெள்ளையெருதேவி
பூதஞ்சூழப்பொழியவருவார்
புலியினுரி தோலர்
நாதவெணவும் தக்காவெணவும்
தம்பாவெண நின்று
பாதந்தொழுவார்
பாவம் தீர்ப்பார் பழன நகராலே

## குபேர சந்தி (வடக்கு)

**பண்- தக்கராகம்**

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமு டித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ
வாரிட மும்பலி தேர்வர்
அணிவளர் கோலமெ லாஞ்செய்து பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வ தோஇவர் மாண்பே

## ஈசான சந்தி (வட கிழக்கு)

**பண்- சாலாபாணி**

திடமலி மதிலணி சிறுகுடி மேவிய
படமலி அரவுடை யீரே
படமலி அரவுடை யீருமைப் பணிபவர்
அடைவதும் அமருல கதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசையும் பண்ணும்

01) இந்திர சந்தி - காந்தாரம
02)அக்கினி சந்தி - கொல்லி
03)யம சந்தி - கௌசிகம்
04)திருதி சந்தி - நட்டபாடை
05)வருண சந்தி - தீகாமரம்
06)வாயு சந்தி - தக்கேனி
07)குபேர சந்தி - தக்காரகம்
08)ஈசான சந்தி - சாதாரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக நாடுகளின் சிறப்பு பெயர்கள்

1) உலகத்தின் கூரை - திபெத்.

2) சூரியன் உதிக்கும் நாடு, காகித வீடு, ரோபோக்களின் வீடு - ஜப்பான்.

3) நள்ளிரவில் சூரியன் உதயமாகும் நாடு - நோர்வே.

4) தெற்கேயுள்ள பிரித்தானியா - நியூலாந்து.

5) நைல் நதியின் கொடை - எகிப்து.

6) ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் - சுவிஸ்லாந்து.

7) உலகின் சர்க்கரைக் கிண்ணம் - கியூபா

8) ஐரோப்பாவின் காப்பகம் - பெல்ஜியம்

9) ஐரோப்பாவின் நோயாளி - துருக்கி

10) மரகதத்தீவு - அயர்லாந்து

11) பொற்கோபுர நாடு - மியன்மார்

12) வில்லிப் பூக்கள் - கனடா

13) அதிகாலை அமைதி நாடு - கொரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) புனித நாடு - பாலஸ்தீனம்.

15) கங்காருகளின் நாடு -
அவுஸ்ரேலியா.

16) தங்கப் போர்வை நாடு -
அவுஸ்ரேலியா.

17) இருண்ட கண்டம் - ஆபிரிக்கா.

18) ஐரோப்பாவின் தானியக் களஞ்சியம் - ஹங்கேரி.

19) வெள்ளை யானை நாடு -
ஸ்கொட்லாந்து.

20)ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு - பின்லாந்து.

21) பற்றை வீடு -
அவுஸ்ரேலியா.

22) சொட்டி நாடு -
ஸ்கொட்லாந்து.

23)பசுபிக் பெருங்கடலின் சாவி - சிங்கப்பூர்

24) முத்து தீவு - பஹ்ரைன்.
(பவளத்தீவு)

25) ஹெர்குலிஸ் தூண்கள் - ஜிப்ரோடர்.

26) இந்து சமுத்திரத்தின் முத்து - இலங்கை.

27) கறுப்புத் தங்கம் -
தென்னாபிரிக்கா.

28) ஒரே ஒரு குடாநாடு - இந்தியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக நகரங்களின் சிறப்பு பெயர்கள்

1. கோயில்களின் நகரம்.
காஞ்சிபுரம்.
2. அரபுக்கடல் ராணி.
கொச்சி.
3. விளக்குகளின் நகரம்.
கேரளா.
4. வாசனைத் துறைமுகம்
ஹொங்.
5. மாடிக்கட்டிட நகரம்.
நியூயோர்க்.
6. இந்தியாவின் பூந்தோட்டம்.
பெங்களுர்.
7. இந்தியாவின் நுழைவாயில்.
மும்பை.
8. பொற்கதவு நகரம்.
சண்பிரான்ஸிஸ்கோ.
9. முடிவில்லாத நகரம்.
ரோமபுரி.
10. புயலடிக்கும் நகரம்.
சிக்காக்கோ.
11. கனவுக் கோபுரங்களின் காற்று நகரம்.
ஒக்ஸ்போட்
12. அரண்மனை நகரம்.
கல்கத்தா.
13. ஏழு குன்றுகளின் நகரம்.
ரோம்.
14. இளஞ்சிகப்பு நகரம்.
ஜெப்பூர்.
15. ஏழு தீவு நகரம்.
மும்பை.
16. புனித நகரம்.
மக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணுலகில்

01 - 08 - 1939

விண்ணுலகில்

04 - 05 - 2020

உருத்திரபுரம் மற்றும் இல:-25குட்பேட்வீதி வவுனியாவை
வசிப்பிடமாகவும் கொண்ட(உயர்

அமரர்

## கணபதிப்பிள்ளை ஏகாம்பரம்

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை
பிரார்த்திப்பதோடுஇவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை

உதவும் கரங்கள்
(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| மண்ணுலகில் | | விண்ணுலகில் |
|---|---|---|
| 01 - 08 - 1939 | | 04 - 05 - 2020 |

உருத்திரபுரம் மற்றும் இல:-25குட்பேட்வீதி வவுனியாவை
வசிப்பிடமாகவும் கொண்ட(உயர்

அமரர்

## கணபதிப்பிள்ளை ஏகாம்பரம்

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை
பிரார்த்திப்பதோடுஇவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை

அறங்காவலர் சபை,
கிளி/உருத்திரபுரம் மாணிக்கப்பிள்ளையார் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதாகைகள் அச்சிட்டோர்

# கண்ணீர் அஞ்சலி



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 01 - 08 - 1939 | 04 - 05 - 2020 |

உருத்திரபுரம் மற்றும் இல:-25குட்பேட்வீதி வவுனியாவை
வசிப்பிடமாகவும் கொண்ட(உயர்
சைவ வேளான் குளத்தவ ருமான)

அமரர்

## கணபதிப்பிள்ளை ஏகாம்பரம்

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திப்பதோடுஇவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகமும்
சனசமூக நிலையமும்
கூழாவடி உருத்திரபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



**மண்ணுலகில்** 01 - 08 - 1939

**விண்ணுலகில்** 04 - 05 - 2020

உருத்திரபுரம் மற்றும் இல:-25குட்பேட்வீதி வவுனியாவை
வசிப்பிடமாகவும் கொண்ட(உயர்

## அமரர்
## கணபதிப்பிள்ளை ஏகாம்பரம்

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை
பிரார்த்திப்பதோடுஇவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை

ஆசிரியர்,மாணவர்,ஊழியர்கள்,பாடசாலை
அபிவிருத்திச்சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணுலகில் 01 - 08 - 1939

விண்ணுலகில் 04 - 05 - 2020

உருத்திரபுரம் மற்றும் இல:-25குட்பேட்வீதி வவுனியாவை
வசிப்பிடமாகவும் கொண்ட(உயர்

## அமரர்

## கணபதிப்பிள்ளை ஏகாம்பரம்


அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை
பிரார்த்திப்பதோடுஇவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை

அரங்காவலர் சபை
உருத்திரபுரீஸ்வரர் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அமரர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எனது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து இறைபதம் அடைந்த அமரர் ஏகாம்பரம் கணபதிப்பிள்ளை அவர்களின்மரணச்செய்தி கேட்டுநேரிலும் தொலைபேசி மூலமாகவும் மற்றும் மாலைகளிட்டும் கண்ணீர் அஞ்சலி நினைவுப்பதாதைகள் வெளியிட்டும் துயரைப்பகிர்ந்து கொண்டு உதவி ஒத்தாசை புரிந்து அன்பு நெஞ்சங்களுக்கும் அந்தியேட்டி கிரியைகளிலும் ஆத்மா சாந்திப்பிரார்த்தனையிலும் கலந்து கொண்டோருக்கும் இந்நூலை அச்சிட்டு வழங்கிய தமிழரசன் பதிப்பகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

**குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

tion.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thamilarasan Printers - 077 0790818